***தகவல் உரிமைச் சட்ட விண்ணப்பம்,***

பதிவு அஞ்சல் ஒப்புதல் அட்டையுடன்,

அனுப்பிநர், நாள் :

பெறுநர்,
பொது தகவல் அலுவலர்,
தகவல் உரிமைச் சட்டம்/2005,
வருவாய் கோட்ட ஆட்சியர் அலுவலகம்,
..............................................................
பின் கோடு ......................................

ஐயா,

நான் கீழ் குறிப்பிட்டுள்ள விலாசத்தில் கடந்த .............................. ஆண்டுகளாக வசித்து வதுகிறேன். நான் மற்றும் எனது குடும்பத்தில் உள்ள பின் வரும் நபர்கள் கடந்த ........................ தேர்தல்களில் வாக்களித்துள்ளோம். தற்போது நடந்து முடிந்த ............................ தேர்தலில் எனது மற்றும் என் குடும்ப மேற்படி உறுப்பினர்கள் பெயர்கள் ஏதும் வாக்காளர் பட்டியலில் இல்லை என்று வாக்குச் சாவடியில் சொல்லிவிட்டார்கள். இதனால் நாங்கள் எங்கள் ஜன நாயக உரிமையை இழந்துவிட்டோம், இது தொடர்பாக எனக்கு பின் வரும் தகவல்களை அளிக்கக் கேட்டுக் கொள்ளுகிறேன்.

தெளிவான இருப்பிட விலாசம்.

..........................................................................................
.........................................................
.........................................................................................................

என் குடும்பத்தில் உள்ளவர்கள் விவரம்,

| பெயர் | | இன்று வயது |
|---|---|---|
| 1 | ...................................................... | ................................................. |
| 2 | ...................................................... | ................................................. |
| 3 | ...................................................... | ................................................. |
| 4 | ...................................................... | ................................................. |
| 5 | ...................................................... | ................................................. |

1) நானும் எனது குடும்பமும் உள்ள பகுதியில் கடைசீயாக எந்த மாதத்தில் வாக்காளர் சரிபார்ப்பு பணி வீடு வீடாக கணக் கெடுக்கப்பட்டது என்ற தகவலையும், மேற்படி விலாசமுள்ள எங்கள் பகுதிக்கு கணக்கெடுப்பு பணி எந்த அலுவலருக்கு ஒதக்கப்பட்டதோ அந்த அலுவலரின் பெயர் அன்றைய மற்றும் இன்றைய பதவிப் பெயர் மற்றும் அஞ்சல் முகவரி ஆகிய தகவல்களையும்,. அந்த அலுவரால் எங்கள் வீடு பற்றி குறிப்புகளை பதிவு செய்து தங்கள் அலுவலகத்தில் அளிக்கப்பட்ட ஆவணத்தின் ஒளி நகலை அளிக்கக் கேட்டுக் கொள்கிறேன்.

2) பல ஆண்டுகளாக வாக்காளர் பட்டியலில் இருந்த மேற்படி பெயர்கள் ஏதாவது ஒரு ஆவணத்தின் அறிக்கையின் அடிப்படையில்தான் நீக்கப்பட்டிருக்கவேண்டும் . அப்படி எந்த ஆவணத்தினை அடிப்படையாகக் கொண்டு நீக்கம் செய்யப்பட்டதோ அந்த ஆவணத்தின் அனைத்து இணைப்புகளோடு ஒளி நகலை அளிக்க கேட்டுக் கொள்கிறேன்.

3) இப்படிப்பட்ட பெயர் நீக்கத்திற்கு காரணமான அலுவலர்கள் பெயர், பதவி பெயர் அவர்களின் அஞ்சல் முகவரி ஆகிய விவரங்களையும், அதே விலாசத்தில் உள்ள எங்கள் பெயர்களை வாக்காளர் பட்டியலிலிருந்து நீக்கி எங்கள் ஜனநாயக உரிமை,. வாக்களிக்கும் உரிமை பறிபோகக் காரணமாக இருந்த அலுவலர்கள் மீது தேர்தல் சட்டங்கள் மற்றும் துறை சாந்த ஒழுங்கு நடவடிக்கை சட்டங்கள், எந்த எந்த பிரிவின் கீழ் நடவடிக்கை எடுக்கப்பட வழிவகைகள் உள்ளன என்ற தகவல்களை அளிக்கக் கேட்டுக் கொள்கிறேன்.

4) பணியாளர் மற்றும் நிருவாக சீர்திருத்தத் துறையின் அரசு ஆணை எண், 114. நாள் - 2-08-2006 ன் ஒளி நகலையும், இலஞ்சம் ஒழிப்பு விழப்புணர்வு தகவல் பலகை வைக்க கடைசியாக பிறப்பிக்கப்பட்ட தமிழக அரசு ஆணையின் ஒளி நகலையும் அளிக்க கேட்டுக் கொள்கிறேன்.

5) கடைசியாக பிறப்பிக்கப்பட்ட தமிழக அரசு ஆணையின் படி தங்கள் அலுவலகத்தில் இலஞ்சம் ஒழிப்பு விழிப்புணர்வு தகவல் பலகை வைக்கப்பட்டதற்கு செய்யப்பட்ட செலவைக் காட்டும் செலவுச் சீட்டின் ஒளி நகலையும்., அந்த தகவல் பலகை தங்கள் அலுவலக பொருட்கள் பதிவேட்டில் எந்த பக்கத்தில் பதிவு செய்யப்பட்டதோ அந்த பக்கத்தின் ஒளி நகலையும் அளிக்க கேட்டுக் கொள்ளுகிறேன்.

6) நான் கோரிய தகவல்களை முழுமையாக அளிக்காமல் அல்லது தவறான அல்லது பொருத்த மற்ற தகவல் அளித்தால் அப்படி செய்யும் அலுவலருக்கு என்ன என்ன தண்டனையை அளிக்கவகை செய்யும் தகவல் உரிமைச் சட்டப்பிரிவின் ஒளி நகலை அளிக்கக் கேட்டுக் கொள்கிறேன்.

இந்த விண்ணப்பத்திற்கான ரூ 10 க்கான கோர்ட் கட்டண வில்லை ஒட்டப்பட்டுள்ளது என்று தெரிவித்துக் கொள்கிறேன்.
இந்த விண்ணப்பத்தில் கோரிய தகவல்களில் ஏதேனும் தங்கள் அலுவலகத்தில் இல்லை எனில் எனது விண்ணப்பத்தை பிரிவு 6(3) ன் படி கையாளக் கேட்டுக் கொள்கிறேன்.

தங்கள் உண்மையுள்ள.